# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No. 217/2022

Deposition of witness – PW18

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. தேவி | Caste | : |
| S/o.W/o. | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 28.07.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

எதிரி ஆஜர்.

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.03.2022 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளராக பொறுப்பு அலுவலகத்தில் இருந்த பொழுது, தேவூர் காவல் நிலையத்தில் அன்றைய தினம் நள்ளிரவு 00.15 மணிக்கு வாதி சித்தநாதன் என்பவர் நிலையம் கொடுத்த புகாரின் பேரில், அன்றைய உதவி ஆய்வாளர் செந்தில்குமரன் என்பவர் தேவூர் காவல் நிலைய குற்ற எண். 21/2022. இந்திய தண்டனை சட்டம் 302 ஐபிசி படி வழக்கு பதிவு செய்து வழக்கினை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்திருந்தார்.

அதனைப் பெற்று அன்றைய தினமே அதிகாலை 1:15 மணிக்கு சம்பவ இடம் சென்று வாதி சித்தநாதன் அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை சாட்சிகள் செல்வராஜ் மற்றும் குழந்தான் என்பவர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தேன். மேற்படி சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன். அதே சாட்சிகள் முன்னிலையில் அதிகாலை 3 மணி அளவில் சம்பவ இடத்தில் இருந்த ரத்தக்கரை படிந்த தினத்தந்தி நாளிதழ் ஒன்று, சுமார் 20.7 சென்டிமீட்டர் நீளம் கொண்ட 13 சென்டிமீட்டர் அகலம் உள்ள ரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரைக்கல் ஒன்று, சுமார் 22.5 சென்டிமீட்டர் நீளமும், 13 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட ரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரைக்கால் ஒன்று, சுமார் 110 சென்டிமீட்டர் நீளம் கொண்ட ரத்தக்கரை படிந்த கட்டில் கயிறு ஒன்று, சுமார் 60 சென்டிமீட்டர் நீளமுள்ள ரத்தக்கரை படியாத கட்டில் கயிறு ஒன்று ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அதே சாட்சிகளிடம் தனித்தனியே கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் செல்வராஜ் மற்றும் குழந்தான் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் தனித்தனியே பெற்றேன்.

மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொள்ள சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு காவலர் மூலம் அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே காலை 7 மணி முதல் 10 மணி வரை சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைத்து இறந்து போன ஆனந்தன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் அவருக்கு சம்மன் சார்வு செய்து பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தேன். மேற்படி அறிக்கையில்

பஞ்சாயத்தார்கள் கையொப்பம் செய்தார்கள். சாட்சிகள் சித்த நாதன், ஆனந்தன், முருகன், ஆனந்தகுமார் அருள்குமார், காளியப்பன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை தலைமை காவலர் திரு.மாதையன் என்பவர் மூலம் சட்டம் சார்ந்த மருத்துவ கல்லூரி பேராசிரியர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் எதிரியை தகவல் வைத்து தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் அரசிராமணி கிராமம் ஓடச்சகரை பஸ் ஸ்டாப்பில் தேவூர் டூ எடப்பாடி ரோட்டில் இடது புறமாக நின்று கொண்டிருந்த எதிரி காத்தவராயன் என்கிற போர் மன்னனை தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட சாட்சிகள் ஸ்ரீதர் – கிராம நிர்வாக அலுவலர், வேலுமணி – கிராம நிர்வாக உதவியாளர் ஆகியோர்களது முன்னிலையில் கைது செய்வதற்கான காரணம் கூறி நடைமுறை விதிகளை பின்பற்றி காலை 11. 45 மணிக்கு கைது செய்து உடன் இருந்த சாட்சிகள் ஸ்ரீதர் மற்றும் வேலுமணி ஆகியோர் முன்னிலையில் விசாரித்த பொழுது அவர் எவ்வித அச்சுறுத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி காத்தவராயன் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சொன்னதன் பேரில் சரபங்க நதி ஆற்று ஓரமுள்ள முட்புதரில் வழக்கில் சம்பந்தப்பட்ட அருவாளை மறைத்து வைத்திருப்பதாக சொன்ன தகவலின் பெயரில்

எதிரியுடன், சாட்சிகளையும் அழைத்துச் சென்று அவர் அடையாளம் காட்டி ஆஜர் செய்த மர காம்பினால் ஆன கைப்பிடி இரும்பு பூனின் நீளம் சுமார் 4.5 சென்டிமீட்டர், இரும்பாலான அருவாளின் நீளம் சுமார் 24 சென்டிமீட்டர் மொத்த நீளம் 45.5 சென்டிமீட்டர் கொண்ட ரத்தக்கரை படிந்த அருவாளையும், அவர் அணிந்திருந்த சுமார் 87 சென்டிமீட்டர் நீளம் சுமார் 160 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட அருள்மிகு திரு சூரிய விநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேக விழா என்று வாசகம் குறித்த ரத்தக்கரை படிந்த மஞ்சள் நிற துண்டினை மாற்றுத் துணி கொடுத்து அன்றைய தினமே 14.00 மணி முதல் 14. 45 மணி வரை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். மேற்படி மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் சாட்சிகள் ஸ்ரீதர், வேலுமணி ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தின் மீது இருந்த உடைமைகளை தனி அறிக்கை மூலம் ரத்தக்கரை படிந்த போர்வை, ரத்தக்கரை படிந்த லுங்கி, பிரவுன் நிற ரத்தக்கரை படிந்து உள்ளாடை ஆகியவற்றை தனி அறிக்கை மூலம் தலைமை காவலர் திரு. மாதையன் ஆஜர் செய்தார். மேற்கண்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களையும், எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

07.03.2022 ஆம் தேதி அன்று பிரேத பரிசோதனையின் பொழுது எடுக்கப்பட்ட உடல் உள் உறுப்புகளை ஆய்விற்கு உட்படுத்த தலைமை காவலர் திரு.மாதையன் மூலம் சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். 12.03.2022–ம் தேதி அன்று

சாட்சிகள் ராமலிங்கம், காளியப்பன், ராமச்சந்திரன், ஆனந்தகுமார், தங்கம், பழனிச்சாமி, ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்தேன். வழக்கின் வாதியான சித்த நாதன், ஆனந்தன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது மறுவாக்கு மூலம் பதிவு செய்தேன். 16.03.2022–ம் தேதி அன்று துரித முதல் தகவல் அறிக்கை நகலை நீதித்துறை நடுவர் வசம் ஒப்படைத்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. ஈஸ்வரன் அவர்களை விசாரணை செய்து, அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். தலைமை காவலர் திரு.மாதையன், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. செந்தில்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்கு மூலம் பதிவு செய்தேன்.

17.03.2022–ம் தேதி அன்று பிரேத பரிசோதனை மேற்கொண்ட சேலம் சட்டம் சார்ந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உதவி மருத்துவ பேராசிரியர் திரு. கார்த்திக் என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன்.

30.03.2022 ஆம் தேதி அன்று வழக்கு சொத்துக்களை நீதித்துறை நடுவர் சங்ககிரி நீதிமன்றத்தில் ஒப்புவித்து அதற்குரிய வழக்கு எண் பெற்றேன். 01.04.2022 ஆம் தேதி அன்று இறந்து போன ஆனந்தன் என்பவர் பிரேதத்தை பகுப்பாய்வு செய்த சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குனர் திருமதி.கீதா என்பவரிடம் ஆய்வு அறிக்கை பெற்று, அவரை விசாரணை செய்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வு அறிக்கை அடிப்படையில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட சேலம் அரசு உதவி மருத்துவ பேராசிரியர் திரு. கார்த்திக் என்பவரிடம் இறப்பு குறித்து இறுதி கருத்துரை பெற்று, அவரை

விசாரணை செய்து மறுவாக்கு மூலம் பதிவு செய்தேன். 19.04.2022ஆம் தேதி அன்று வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை காவலர் 2472 திரு.மயில்சாமி என்பவர் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்புவித்தேன்.

16.04.2022 ஆம் தேதி அன்று தேவூர் உதவி பொறியாளர் கதிரேசன் அவர்களிடம் 05.03. 2022 ஆம் தேதி அன்று இரவு 7 மணி முதல் அடுத்த நாள் காலை 6 மணி வரை மேற்படி சம்பவ இடத்தில் தடை இல்லாமல் மின்சாரம் இருந்ததா என்பது குறித்த சான்றிதழ் பெற வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அறிக்கை பெற்றேன். அவர் மேற்படி சம்பவ தினத்தில் மின் தடை ஏற்படவில்லை என சான்று வழங்கினார். அவரையும், கம்பியாளர் திரு. கிருஷ்ணன் என்பவரையும் விசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.04.2022–ம் தேதி அன்று காவலர் திரு.மயில்சாமி முதல் நிலை காவலர் திரு.பாக்கியராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்கு மூலம் பதிவு செய்தேன்.

பின்னர் சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் திரு. முருகேசன் என்பவரிடம் ஆய்வு அறிக்கை பெற்று, அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் புலன் விசாரணை முடித்து 07.07.2022 ஆம் தேதி அன்று வழக்கின் எதிரியான போர் மன்னன் என்ற காத்தவராயன் மீது இந்திய தண்டனை சட்டம் 302 பிரிவின் கீழ் இறுதி அறிக்கை நீதித்துறை நடுவர் எண்.1 சங்ககிரி அவர்கள் வசம் ஒப்படைத்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 12, சீராலஜி அறிக்கை அ.சா.ஆ. 13, பயாலஜி அறிக்கை அ.சா.ஆ. 14, விசரா அறிக்கை அ.சா.ஆ. 15, படிவம் 95

அ.சா.ஆ. 16, 17 மற்றும் 18.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காவல்நிலையத்தில் புகார்தாரருடன் யார் யார் இருந்தார்கள் என்றால். நான் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டேன். வெளியிலேயே முதல் தகவல் அறிக்கை பெற்றுக் கொண்டு விசாரணைக்கு சென்று விட்டேன் என்பதால் தேவர் காவல் நிலையத்தில் புகார்தாரருடன் ஊர் காரர்கள் இருந்தார்களா என்பது குறித்து நான் தெரிந்து கொள்ளவில்லை. உதவி ஆய்வாளர் என்னுடன் விசாரணைக்கு ஒத்துழைப்பு செய்தார். புகாரிலும் எனது விசாரணையிலும் புகார் தாரரான சித்த நாதன் எதிரானவர் மஞ்சள் நிறத்தில் வேஷ்டி அணிந்து கொண்டு கையில் ரத்தக்கரை கொண்ட அருவாளுடன் எதிரி கோயில் பக்கத்தில் இருந்து வந்தார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அருவாளுடன் வேகமாக வந்ததாக சொல்லி உள்ளார். புகாரில் தனது மனைவி ஆறு வருடத்திற்கு முன்னால் இருந்ததாகவும் கூட்டாக தொழில் செய்ததாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்ன தொழில் செய்தார் என்ற விபரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், புகார் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. புகார் கொடுப்பதற்கு ஒன்னே முக்கால் மணி நேரம் காலதாமதம் ஏன் என்ற விபரத்தை புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சாட்சி காஸ்ப்ரோ என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அவரை நான் விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால், அவர் சாட்சியாக இருக்க முன்வராத காரணத்தினால் அவரது வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. ஆனால் நான் அவரை விசாரணை செய்தேன். சம்பவ இடத்திற்கு நான்

சென்ற பொழுது காவலர்கள் அங்கு இருந்தார்களா என்றால், என்னுடன் காவலர்கள் வந்தார்கள். சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தேனா என்றால், என்னுடன் வந்த முதல் நிலை காவலர் திரு.பாக்கியராஜ் என்பவர் சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்தார். செல்போனில் எடுத்தார். அவ்வாறு எடுத்த புகைப்படத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வரைபடத்தில் நதிக்கரையில் இருந்து கோயில் இடத்தில் ஒரு ஒரு அரசு பள்ளி மற்றும் ஊர் பெரிய மாரியம்மன் கோயில் உள்ளது என்றால் சரிதான். நான் மெயின் ரோட்டிற்கும், நதிக்கரைக்கும் இடையே ஒரே ஒரு கோயில் மட்டுமே இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் என்ன இருக்கிறது என்பதை மட்டுமே நான் வரைபடத்தில் காட்டி உள்ளேன்.

ஆண்கள் கழிப்பிடத்திற்கும், கோயிலுக்கும் இடையே ஒரு கிறிஸ்டியன் சுடுகாடு உள்ளது என்றும், அதை நான் வரைபடத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். 32 அடி உயரம் கொண்ட ஒரு சிலை உள்ளது என்றும், அந்த சிலைக்கு அடியில் ஒரு பெரிய அறை உள்ளது என்றும், அதை பார்வை மகசரிலும் மாதிரி வரைபடத்திலும் காட்ட வில்லை என்றால் சரிதான். செட்டிப்பட்டி மெயின் ரோட்டில் இருபுறமும் வீடுகளும், கடைகளும் உள்ளது என்றால், அது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், நான் வரைந்த மாதிரி வரைபடத்திற்கும் சம்பந்தமே இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நான் சம்பவ இடத்தில் எடுத்த புகைப்படத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எனவே சம்பவ இடமே வேறு என்றும், புகைப்படத்தை பார்த்தால் சம்பவம் எது என்று தெரியும் என்றும், அதனால்

தான் அதை காட்டவில்லை என்றால் சரியல்ல. மெயின் ரோட்டில் உள்ள கடைக்காரர் மற்றும் அங்குள்ள வீட்டில் உள்ள நபர்கள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன பூசாரி மனைவி கோயில் பக்கத்தில் பூஜை சாமான்கள் விற்கும் கடையை வைத்துக்கொண்டு கோயில் அருகிலேயே இறந்து போன பூசாரியுடன் கோயில் அருகிலேயே இருப்பார் என்றால் சரியல்ல. அந்த பூசாரியின் மனைவியையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தேன், அவரது வாக்குமூலம் மட்டும் பதிவு செய்யவில்லை. அவ்வாறு அவர்கள் வாக்குமூலம் பதிவு செய்யாததற்கு பிரத்தியேக காரணம் எதுவும் உண்டா என்றால், எதுவும் கிடையாது. எதிரியின் வீட்டில் யாரேனும் உள்ளார்களா என்று நான் விசாரணை செய்து, அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால், அவ்வாறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அங்கு பக்கத்தில் இருந்த நபர்களை விசாரணை செய்தேன். ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. புகார் தாரரும், எதிரியும் கூட்டாக தொழில் செய்தார்கள் என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மொத்தம் நான்கு பேர் கூட்டாக தொழில் செய்துள்ளார்கள். எதிரி தனது மனைவி இறந்து பத்து ஆண்டுகள் ஆகிறது என்றும்,மற்ற நபர்களுடன் கூட்டாக தொழில் செய்ய முடியாது என்றும், தனது மூன்று குழந்தைகள் சிறுவயதாக இருக்கும் காரணம் சொல்லி பாகத்தை பிரித்துக் கொண்டு வெளியே வந்தார் என்றால் சரிதான். சித்தநாதன் என்பவர் எதிரி வாங்கிய டிராக்டர் மற்றும் கட்டை உடைக்கும் மிஷின் ஒன்றை எடுத்துக் கொண்டார் என்றால், ஆனந்தன் என்பவரது மகன் என்ற காரணத்தினால் அவரிடம் அந்த வாகனம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்குண்டான பணத்தை எதிரிக்கு சித்தநாதன்

கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு கொடுக்காத காரணத்தினால் தான் எதிரியுடன் அவருக்கு 10 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் மகஜர் சாட்சிகளை தவிர வேறு யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கை நான் சம்பவ இடத்தில் செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் உண்டா என்றால் காரணம் எதுவும் கிடையாது.சாட்சி சித்த நாதன் என்பவரது வீடு சகல வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி வீடு என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் அவரது வீடு அமைந்துள்ளது என்றால் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். அங்கிருந்து பார்த்தால் கோயில் நன்றாகத் தெரியும் என்றால், பாத்ரூமில் இருந்து தான் அவர் பார்த்துள்ளார். ஆண்கள் கழிப்பிடத்திலிருந்து அவர் பார்த்துள்ளார். எதிரியின் வீட்டிலிருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். கோவிலில் இரவு நேரத்தில் பூசாரி தங்குவார். இரவு நேரத்தில் கோயிலுக்கு வரும் நபர்கள் தங்குவார்களா என்றால், ஏதாவது ஒரு சமயத்தில் தங்குவார்கள். அந்த கோயிலுக்கு சம்பந்தப்பட்ட துணை பூசாரி, தர்மகர்த்தா, பட்டக்காரர், கொட்டுக்காரர் ஆகியோர்களை நான் விசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால், அவ்வாறு வந்த நபர்கள் அனைவரையும் நான் விசாரணை செய்தேன். ஆனால் வாக்குமூலம் மட்டும் பதிவு செய்யவில்லை. அவ்வாறு பதிவு செய்யாததற்கு பிரத்தியேக காரணம் எதுவும் உண்டா என்றால் அவர்கள் சாட்சியாக இருக்க முன்வராத காரணத்தினால் அவர்களது வாக்குமூலம் நான் பதிவு செய்யவில்லை. இது ஊர் பொதுக் கோயில் அரசுக்கு சொந்தமான இடம் சித்தநாதன் மற்றும் ஆனந்தன் ஆகியோர்களது வாக்குமூலத்தை நான்

பதிவு செய்துள்ளேன். அவர்களது வாக்குமூலம் நீதித்துறை நடுவர் மூலமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி என்றைக்கு விசாரிக்கப்பட்டது என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால், 02.07.2025 ஆம் தேதி அன்று சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. நீதித்துறை நடுவர்களை தற்போது சாட்சியாக சேர்ப்பதில்லை என்ற காரணத்தினால் அவரது வாக்குமூலம் பதிவு செய்வதில்லை. குற்றவாளி இல்லை என்று சாதகமாக அந்த சாட்சிகளின் வாக்குமூலம் வந்துள்ளது என்ற காரணத்தினால் தான் அந்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதித்துறை நடுவரிடமிருந்து பெற்று வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

அ.சா. 2 முருகன் பூசாரியின் சொந்த மைத்துனர் என்றால் சரிதான். அவர் எனது விசாரணையின் பொழுது 10 வருடத்திற்கு முன்னால் தனக்கும் எதிரிக்கும் டிராக்டர் சம்பந்தமாகவும், ஏலசீட்டு சம்பந்தமாகவும் விரோதம் என்று சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லவில்லை. பத்து வருடத்திற்கு முன்பே காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் கொடுத்து பிரச்சனை தீர்ந்து விட்டதாக சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. புகாரில் புகார் சீட்டு எதுவும் நடத்தியதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். மறுவாக்குமூலத்தில் சொல்லி உள்ளார்.

அ.சா.3 ஆனந்தகுமார் கூலி வேலை செய்வதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அவர் இறந்து போன பூசாரியின் சித்தப்பா என்ன சொல்லி உள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர் பெரியப்பா என்றால்

சரிதான். அவர் எனது விசாரணை வாயிலாக கெம்ப்ளாஸ்டில் கெமிஸ்ட்டாக வேலை செய்ததாக தெரியவந்தது என்றால் சரிதான். அவரது மருமகனான காளியப்பன் டெக்ஸ்டைல்ஸ் பிசினஸ் செய்வதாகத்தான் எனது விசாரணையில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் அவர் ஈரோட்டில் கூலி வேலை செய்வதாக நான் தெரிந்து கொண்டேன் என்றால் எனது வாக்கு மூலத்தில் சொன்ன விபரத்தை தான் நான் பதிவு செய்தேன். அவருக்கும் புகார்தாரருக்கும் பத்து வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லை என்றும், பணம் கொடுக்காத காரணத்தினால் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல.

அ.சா.4 குழந்தான் எனது விசாரணையில் அவரும் ராஜேந்திரன் என்பவரும் செட்டி பட்டியில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, போலீசார் அவரை அழைத்து கையெழுத்து பெற்றதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அது சம்பவ இடத்திற்கு பக்கத்தில் தான். சாட்சியாக இருப்பதற்கு அழைத்ததன் பேரில் அவர்கள் வந்தார்கள். அவ்வாறு அந்த இரண்டு நபர்களை மட்டும் குறிப்பிட்டு அழைத்து வந்ததற்கான காரணம் என்ன என்றால், அவர்கள் சம்பவ இடத்தில் இருந்த காரணத்தினால் அவர்களை அழைத்து வந்தேன். சம்பவ இடம் வேறு செட்டிப்பட்டி என்பது வேறு என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போனபோது சுமார் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்றால் 20 பேர் இருந்திருப்பார்கள். எனது விசாரணையில் சுமார் ஒரு மணிக்கு கையெழுத்து போட்டதாக சொல்லி உள்ளார் என்றால் 1:15 மணிக்கு நான் சம்பவ இடம் சென்றேன்.

அ.சா.7– ராமலிங்கமும் இறந்தவரும் ஒன்றாக கூட்டாக தொழில் செய்து வந்தவர்கள் என்றால் சரிதான். எதிரி போர்மன்னன் தனது மனைவி

இறந்து போன காரணத்தினால் கூட்டுத் தொழில் இருந்து பிரிந்து சென்றார் என்றால் சரிதான். சாட்சி ராமலிங்கம் எனது விசாரணையில் காலை 8 மணிக்கு காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்ததாகவும், ஊர் மக்களும் உடன் வந்தார்கள் என்றும், அங்கு எதிரி போர் மன்னனை பார்த்ததாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது விசாரணையின் பொழுது எதிரியை அன்றைய தினம் இரவே கைது செய்து விட்டதாகவும், மறுநாள் காலையில் செய்தித்தாளில் இது சம்பந்தமான விவரம் பார்த்ததாகவும், லோக்கல் சேனலிலும் அது சம்பந்தமாக செய்தி வந்ததாகவும் சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல.

அ.சா. 8– ராமச்சந்திரன் இறந்து போன பூசாரியின் மனைவியின் தாய் மாமா என்றால் உறவினர் என்று தான் சொல்லியுள்ளார். அந்த விபரத்தை நான் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவரும் இரவே எதிரியை கைது செய்து விட்டதாக ஊர் மக்கள் சொல்லிக் கொண்டதாக எனது விசாரணையில் சொல்லி உள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை.

அ.சா.9–தங்கம் என்ற இளங்கோ சம்பவ இடமான கோயிலுக்கு எதிரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் எனது விசாரணையில் இரவு 9 மணிக்கு இறந்து போன பூசாரி கோயிலில் பேசிக் கொண்டிருந்ததாக சொல்லி உள்ளார் என்றால் சொல்லவில்லை. 50 நபர்கள் கூடி இருந்தார்கள் என்றும் காவலர்களும் இருந்தார்கள் என்று இரவு 12 மணிக்கு அவ்வாறு இருந்தார்கள் என்று எனது விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. தடை இல்லா மின்சாரம் இருந்தது தொடர்பாக சான்றிதழ் கதிரேசன் உதவி பொறியாளரிடம் சான்றிதழ் பெற்றேன். கிருஷ்ணன் என்ற கம்பியாளர் சான்றிதழ் வழங்கியதன் பேரில்

கதிரேசனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சான்றிதழ் கிருஷ்ணன் என்பவரிடமிருந்து பெற்றேன். கிராம நிர்வாக அலுவலரை நான் போன் மூலம் வரச் சொன்னேன். கிராம நிர்வாக அலுவலர் வந்த பிறகு அவருடன் ஒன்றாக சேர்ந்து சென்று தான் எதிரியை கைது செய்தேன். ஓடக்கரை பஸ் ஸ்டாப்பில் இரண்டு பக்கமும் பஸ் நிறுத்தம் உள்ளது எந்த பக்கம் உள்ள பஸ் நிறுத்தத்தில் கைது செய்தேன் என்றால், தேவூர் செல்லும் இடதுபுறத்தில் உள்ள பஸ் ஸ்டாப்பில் வைத்து கைது செய்தேன். அது தேவூர் – எடப்பாடி சாலை ஆகும். சாலையின் இடது புறம் கைது செய்தேன். கிராமம் என்பதால் சாட்சியாக யாரும் வர மாட்டார்கள் என்ற காரணத்தினால் கிராம நிர்வாக அலுவலரை நான் அழைத்துச் சென்றேன். எதிரி ஒரே ஒரு ஊரை சேர்ந்தவர் என்பதால் உள்ளூர் காரர்கள் யாரும் சொல்ல வர மாட்டார்கள். ஓடக்கரை பஸ் ஸ்டாப்பில் இரண்டு பக்கமும் கடைகள் உள்ளது என்றால் அதிகமாக கடைகள் கிடையாது. ஜீப்பிலேயே எங்களால் பிரிண்ட் அவுட் எடுக்க முடியும் சில சமயம் வரவில்லை என்றால் மட்டுமே வெளியில் கடையில் கொடுத்து எடுப்போம். தற்பொழுது பிரிண்ட் அவுட் எங்க எடுக்கப்பட்டது என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை உச்சநீதிமன்ற ஆணையின்படி கைது நமூனா தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான். 41 சிஆர்பிசி படி கைது நமுனா தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான். கைது நமூனா நான் தனியாக தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. தற்பொழுது சிசிடிஎன்எஸ் வாயிலாக அதில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து நாங்கள் அனுப்பியுள்ளோம். கைது செய்த நபரின் உறவினர்களிடம் கையொப்பம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்தால் மட்டுமே நீதித்துறை நடுவர்

எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைப்பார். உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களை கடைபிடிக்கவில்லை என்றும், எதிரியை கைது செய்தது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன தேதியில் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. அங்கு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் எனது கைப்பட எழுதியது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்ல சொல்ல பார்வை மகசர் ஆனது எனது உதவியாளர் தயார் செய்தார். அவர் பெயர் பாக்கியராஜ்.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியானவர் சாட்சிகள் முன்னிலையில் எவ்விதமான ஒப்புதல் வாக்கு மூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி அன்றைய தினம் இரவு வீட்டில் இருந்து காவலர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து எதிரியை கைது செய்ததாக அன்று காலை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர்களை காவல் நிலையத்திற்கு வரவழைத்து ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்று கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் புகார்தாரருக்கும் தொழில் சம்பந்தமாக 10 வருடத்திற்கு முன்பே பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்து வந்தது என்றும், அந்த டிராக்டருக்கு எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை அ.சா.1 சித்தநாதன் எதிரிக்கு கொடுக்காத காரணத்தினால் அந்த

பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் எதிரியை இந்த வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் தவறான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல..

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.07.28 07:54:10 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சேலம்.